# 18

## சபை:

# பிரசங்கியார், அவருடைய வாழ்க்கையும் கடமைகளும்

## அர்த்தம்

1. **"பிரசங்கியார்" என்ற வார்த்தையை விளக்கப்படுத்தவும்.**
   *அறிவிப்பவர் அல்லது செய்தியாளர்; புதிய ஏற்பாட்டில் சுவிசேஷத்தை அறிவிப்பவர்.*
2. **"சுவிசேஷகர்" என்ற வார்த்தையை விளக்கப்படுத்தவும்.**
   *நல்ல செய்திகளைக் கொண்டு வருபவர் (அப். 21:8).*

## அவருடைய வாழ்க்கை

1. **அவர் தம்மை எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும் (1 தீமோ. 5:22)?**
2. **அவர் எதைச் செய்யும்படி முயற்சிக்க வேண்டும் (அப். 24:16; 1 தீமோ. 1:5)?**
3. **அவர் எதில் ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும் (1 தீமோ. 4:12)?**
4. **அவர் தம்மை எல்லாவற்றிலும் என்னவாகக் காண்பிக்க வேண்டும் (தீத்து 2:7)?**
5. **அவருடைய வாழ்க்கையும் போதனையும் எவ்வாறு இசைவுடன் இருக்க வேண்டும் (1 தீமோ. 4:16)?**
6. **அவருடைய தெளிந்த புத்தி மற்றும் தீங்கநுபவித்தல் பற்றிய விஷயம் என்ன (2 தீமோ. 4:5)?**
7. **இந்த உலகத்திற்குரிய விஷயங்கள் குறித்து அவரது உறவுமுறை எப்படியிருக்க வேண்டும் (2 தீமோ. 2:4)?**
8. **தேவைப்பட்டால் அவர் எதை அனுபவிக்கத் தயாராயிருக்க வேண்டும் (2 தீமோ. 2:3)?**
9. **அவசியமான நேரங்களில், அவர் உடல் உழைப்பில் ஈடுபட வேண்டுமா (அப். 18:1-3)?**
   *அ. அவர் ஏன் இவ்விதமாக உழைக்க வேண்டும் (அப். 20:33-35)?*
   *ஆ. இவ்விதமான உழைப்பு பவுலுக்கு வேறு எவ்விதத்தில் உதவிற்று (1 கொரி. 9:19-22)?*
10. **எல்லாவற்றிலும் அவர் எதைக் காண்பிக்க வேண்டும்? உபதேசத்தில் எதைக் காண்பிக்க வேண்டும் (தீத்து 2:7)?**
11. **பிரசங்கியார் தனது பண்பை எவ்வாறு காத்துக் கொள்ள வேண்டும் (2 தீமோ. 2:22; 1 தெச. 5:22)?**

## *அவருடைய தயாரிப்பு*

1. ***அவர் எவற்றில் எச்சரிக்கையாய் இருக்க வேண்டும் (1 தீமோ. 4:13)?***
2. ***புத்தகங்களை அவர் எவ்விதம் பயன்படுத்த வேண்டும் (2 தீமோ. 4:13)?***
3. ***அவர் என்ன செய்வதற்குப் படிக்க வேண்டும் (2 தீமோ. 2:15)?***
   - *அ. அவர் எவ்வகையான ஊழியக்காரராக இருக்க வேண்டும் (2 தீமோ. 2:15)?*
   - *ஆ. அடுத்து அவர் என்ன செய்ய வேண்டும் (2 தீமோ. 2:15)? "சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்து" (2 தீமோ. 2:15) என்பதன் அர்த்தம் என்ன?*

## *அவர் எதை மற்றும் எவ்வாறு பிரசங்கிக்க வேண்டும்?*

1. ***எல்லாருக்கும் கர்த்தருடைய கட்டளை என்ன (மாற். 16:15)?***
2. ***அவர் எப்பொழுதும் எதைப் பேச வேண்டும் (தீத்து 2:1, 8)?***
3. ***யாருக்குப் பிரசங்கிக்கக் கூடாது? பிரசங்கிக்கப்பட வேண்டியது என்ன (2 கொரி. 4:5)?***
   - *அ. சமாரியர்களுக்குப் பிலிப்பு பிரசங்கித்தது என்ன (அப். 8:5)?*
   - *ஆ. அவர் எப்பொழுதும் எதிலே மேன்மை பாராட்ட வேண்டும் (கலா. 6:14)? அவர் எப்பொழுதும் எதைத் தெரிந்து கொள்வதில் நிச்சயமாய் இருக்க வேண்டும் (1 கொரி. 2:2)?*
4. ***அவர் ஒவ்வொரு நபரையும், கூட்டத்தாரையும் எவ்விதம் அணுக வேண்டும் (1 கொரி. 2:1)?***
5. ***எல்லாப் பிரசங்கியார்களுக்கும் பவுல் அளித்த இறுதிக் கட்டளையைத் தருக (2 தீமோ. 4:1, 2)?***
6. ***நடக்கையைப் பற்றி மற்றவர்களுக்கு அவர் எவ்வாறு போதிக்க வேண்டும் (1 தீமோ. 3:15)?***
7. ***அவர் எந்த அதிகாரத்துடன் பேச வேண்டும் (2 தீமோ. 4:2; தீத்து 2:15)?***
8. ***கள்ள போதகர்கள் பற்றி அவருடைய எண்ணப்போக்கு எப்படி இருக்க வேண்டும் (1 தீமோ. 1:3, 4)?***
9. ***புதிதாய் மனம் மாறியவர்களுக்கு அவர் என்ன செய்ய வேண்டும் (அப். 14:22; 15:36, 41)?***
10. ***சபைக்கு அவர் எவ்வழியில் உதவலாம் (தீத்து 1:5)?***
11. ***வேதப் புரட்டு செய்கின்ற மனிதரைக் குறித்து அவருடைய எண்ணப்போக்கு எப்படியிருக்க வேண்டும் (தீத்து 3:10, 11)?***

## *அவருடைய உள்ளூர் மற்றும் தனிப்பட்ட ஊழியம்*

1. ***பிரசங்கியார் முழு நேர அல்லது பகுதி நேர ஊழியம் செய்யும்படி ஒரு சபையுடன் இருக்கலாமா? பவுல் கொரிந்துவில் எவ்வளவு***

***காலம் தங்கியிருந்தார் (அப். 18:11)? எபேசுவில் எவ்வளவு காலம் தங்கி இருந்தார் (அப். 19:8-10)?***

2. ***அவர் தம் ஊழியத்தில் எப்பொழுதும் யாருக்குக் கீழ்ப்பட்டிருக்க வேண்டும் (எபி. 13:7, 17)?***
3. ***அவருடைய பொதுவான மற்றும் தனிப்பட்ட போதித்தல்களைப் பற்றிய விஷயம் என்ன (அப். 5:42; 20:20)?***

## பொதுவானவை

1. ***பிரசங்கியாரின் சுய தோற்றம் குறித்து, அவர் அதை எவ்வாறு மதிக்க வேண்டும்?***
   *அவரது சுய தோற்றம் என்பது அவரது ஊழியம் மற்றும் செல்வாக்கு ஆகியவற்றிற்கு எவ்விதத்தில் மதிப்பைக் கூட்டும் அல்லது கவனத்தைத் திசை திருப்பும்?*
2. ***அவருடைய அன்றாடப் பழக்கங்கள் பற்றிய விஷயம் என்ன? அவர் புகையிலையை - புகைப்பது அல்லது மெல்லுவது என்ற வகையில் - பயன்படுத்தலாமா?***
3. ***அவர் சமூகக் கழகங்கள், ஊழிய இணையங்கள் முதலியவற்றைச் சார்ந்திருக்க வேண்டுமா?***
4. ***அவர் தம் பிரசங்கித்தல் மற்றும் சொந்தமானவைகள் என்ற வேலைகளை எவ்விதம் சமநிலைப்படுத்த வேண்டும் (அப். 5:42)?***